DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பரமசிவம் | Father/Husband Name : மணிகண்டன் |
| Age : 33 | Village : நத்தத்துபட்டி |
| Taluk : | Calling : பைனான்ஸ், பைனான்ஸ் ரியல் எஸ்டேட், ஃபயர் வொர்க் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Jan 6, 2026 4:31 PM
(Accused Present.)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பட்டப்படிப்பு முடித்துவிட்டு, ஆந்திராவில் எல்எல்பி படித்தேன். ஆனால் அதை படித்து முடிக்கவில்லை. இந்த வழக்கு காசோலை கொடுக்கப்பட்ட தேதியில் நான் ஆந்திராவில் எல்எல்பி படித்துக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எதிரி ஹரிகிருஷ்ணன் எனக்கு யார் மூலம் பழக்கம் என்றால் அவர் லாரி செட் வைத்துள்ளார், அவரிடம் வேலை பார்க்கும் மணிகண்டன், கோகுல் மாதவன், காளிராஜ் ஆகியோர்கள் மூலம் 2023ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அவர் எனக்கு பழக்கம் ஆகும். எனக்கும் எதிரிக்கும் இடையே சுமார் 25 வயதுகள் வித்தியாசம் உண்டு என்றால் சரிதான்.

2. எதிரி என்னிடம் 06.07.2024 ஆம் தேதி கடன் கேட்டதாக கூறுவது அவர் எங்கு வைத்து கடன் கேட்டார் என்றால் அவருடைய லாரி செட் முன்பு வைத்து கேட்டார், அவர் 6.7.2024 ஆம் தேதி கடன் கேட்கவில்லை, அதற்கு முன்பாகவே கடன் கேட்டிருந்தார். நான் எதிரிக்கு கொடுத்ததாக கூறும் பணம் ரூ.6 லட்சத்து 35 ஆயிரத்தை 6/7/2024 ஆம் தேதியே கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிக்கு நான் மேற்படி பணத்தை அவருடைய லாரி செட் முன்பு வைத்து தான் கொடுத்தேனா என்றால் என்னுடைய வீட்டில் வந்து வாங்கி சென்றார். அப்பொழுது எங்கள் வீட்டில் வேறு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் என்னுடைய அம்மா அப்பா ஆகியோர் இருந்தார்கள். அவர்களுக்கு நான் எதிரிக்கு கடன் கொடுத்த விபரமும், எதிரி என்னிடம் கடன் வாங்கிக் கொண்ட விபரமும் தெரியும் என்றால் சரிதான்.

3. எதிரி என்னிடம் கடன் வாங்கிய ஆறு ஏழு 2024 ஆம் தேதியே பிணையமாக அவருடைய ஆசிக்ஸ் வங்கி காசோலையை நிரப்பப்படாமல் கொடுத்தார் என்றால் சரிதான், கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்தார். அவர் அந்தத் தொகையை ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக கூறி கடன் வாங்கினார் என்றால் சரிதான். கடன் வாங்கிய தேதியில் எதிரி என்னிடம் ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார் என்றால் இல்லை, காசோலை மட்டும் தான் கொடுத்தார். எதிரி என்னிடம் பிணையத்திற்காக ஒரு நிரப்பப்படாத கடனுறுதிச் சீட்டையும் கொடுத்து வைத்திருந்தார் என்றாலும், நான் வழக்கிற்காக அதை மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. சாத்தூரில் உள்ள பெடரல் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, ஐசிஜசிஜ வங்கி ஆகியவற்றில் எனக்கு வங்கி கணக்கு இருக்கிறது என்றால் சரிதான். நான் என்னுடைய அப்பாவுடன் சேர்ந்து விவசாயம் செய்யும் நிலங்களுக்கு அடங்கல், சிட்டா, நில சாகுபடி விபரங்கள் இருக்கிறது என்றால் சரிதான். அந்த நிலங்களில் இருந்து வரக்கூடிய

வருமானங்களில் இருந்து தான் நான் கடன் கொடுத்தேன் என்றால் அதுவும் ஒரு காரணமாகும். நான் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். பணம் கடன் கொடுப்பதற்கான உரிமம் நான் வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரிதான். சீட்டு சட்டத்தின் கீழ் உரிமம் வாங்கிள்ளேனா என்றால் இல்லை. பணம் கடன் கொடுப்பதற்காக நான் வாங்கி உள்ள உரிமத்தை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. நான் வருமான வரி செலுத்துகிறேன் என்றால் சரிதான். நான் யாருக்கெல்லாம் பணம் கொடுத்துள்ளேன் என்ற விபரத்தையும், எனக்கு பணம் வரவேண்டிய விபரத்தையும் என்னுடைய வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு காசோலை திருப்பப்பட்டது தொடர்பாக அனுப்பிய அறிவிப்பிற்கு அவர் பேச்சிமுத்து என்ற வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் இந்த வழக்கில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. எதிரி அவருடைய வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்புக்கு நான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் மறுப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

6. எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் நான் அவருக்கு 06.01.2024 ஆம் தேதி ரூபாய் 50 ஆயிரத்தையும், 14/1/2024 ஆம் தேதி ரூபாய் 50 ஆயிரத்தையும் Gpay மூலமாகவும், எதிரி அவருடைய நண்பர் மணிகண்டன் மூலம் என்னிடம் 18/11/2023 ஆம் தேதி ரூபாய் 50,000 வாங்கியதாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த பண பரிவர்த்தனைகள் அனைத்தும் இந்த வழக்கில் கடன் கொடுப்பதற்கு முன்பு நடைபெற்ற பரிவர்த்தனைகள் ஆகும். எதிரி என்னிடம் வாங்கிய பணம் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரத்தை அவருடைய Gpay கணக்கிலிருந்து 04.01.2024 முதல் 05.09.2024ம் தேதிவரை என்னுடைய Gpay கணக்கிற்கு ரூபாய் 4,55,000/- எதிரி அனுப்பியுள்ளார் என்றாலும், ரொக்கமாக ரூபாய் 15,000/- கொடுத்துள்ளார் என்றாலும் அவர் எனக்கு ரொக்கமாக ரூபாய் 15,000 கொடுத்ததாக கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை, ஆனால் அவர் என்னுடைய Gpay கணக்கு மூலமாக ரூபாய் 4 லட்சத்து 55 ஆயிரத்தை கொடுத்த தொகை நான் அவருக்கு கைமாற்றாக கொடுத்ததை அவர் எனக்கு அனுப்பிய தொகை ஆகும். என்னிடம் அடிக்கடி கைமாத்தாக பணம் வாங்கி அதை திருப்பிக் கொடுத்தார் என்ற விபரத்தை நான் அனுப்பிய அறிவிப்பு மற்றும் தாக்கல் செய்துள்ள புகாரில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

7. எதிரி என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்த பிறகும் நான் அவரிடம் பிணையமாக வாங்கிக் கொண்ட காசோலை மற்றும் கடனுறுதிச் சீட்டை திருப்பி கொடுக்காததால் அவர் என் மீது சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான், அதில் உண்மை இல்லை என்பதால் அந்த புகாரின் மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அந்த காவல் நிலைய நடவடிக்கையில் எதிரியின் காசோலையையும் கடனுறுதிச் சீட்டையும் அவரிடம் கொடுக்க போலீசார் அறிவுறுத்தினார்கள் என்றால் இல்லை. இதற்கு முன்பாகவே நான் எதிரியின் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்து, அது திருப்பப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு நான் எதிரி மீது சாத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் என்னிடமிருந்து காசோலையை

பறிமுதல் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு எண் 66/2024 வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் நான் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்த பிறகு எதிரி போலீஸ் மூலம் காசோலையை என்னிடம் இருந்து பறிக்க முயற்சி செய்ததால் நான் அந்த வழக்கை தாக்கல் செய்தேன். எதிரி என்னிடம் காசோலையை கேட்ட போது காசோலை வீட்டில் வேறு ஆவணங்களுடன் கலந்துவிட்டது, அதை திருப்பித் தருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்று எதிரி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. என்னுடைய தந்தையின் பெயர் கே.பி.மணிகண்டன் என்றால் சரிதான். என்னுடைய அப்பா இருக்கன்குடி காவல் நிலையத்தில் 15.10.2024 ஆம் தேதி எதிரி மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் அந்த காவல் நிலைய குற்ற எண் 131/2024 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், காசோலை கேட்டு என்னுடைய அப்பாவின் கடைக்கு சென்று அவரை அடித்ததால் அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கு ஒ. மேட்டுப்பட்டியைச் சார்ந்த காளிராஜ், அங்காள பரமேஸ்வரி மற்றும் எதிரி ஆகியோர் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் காளிராஜ் மற்றும் எதிரி மீது பதிவு செய்யப்பட்டதாகும்.

9. மேற்படி வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் எதிரி ஹரி கிருஷ்ணா மற்றும் காளிராஜ் ஆகிய இருவரும் திருநெல்வேலியில் உள்ள அவர்களுடைய வழக்கறிஞரை பார்க்க சென்றதற்கான சிசிடிவி பதிவு மற்றும் செல் போன் அழைப்பு இருந்ததன் அடிப்படையில் மேற்படி வழக்கின் மேல்விசாரணை பொருண்மை பிழை என்று நிறுத்தப்பட்டுள்ளது என்றால் அதற்கான அறிவிப்பு எங்களுக்கு இன்னும் வரவில்லை. அந்த இறுதி அறிக்கைக்கான அறிவிப்பு என்னுடைய தந்தைக்கு காவல்துறையால் அறிவிப்பு எண்.39/2024 ஆக சார்பு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதை மறுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

10. நான் எதிரிக்கு கொடுத்த கடன் தொகைக்கு வரம்பு மீறி வட்டி கேட்டு அச்சுறுத்தினேன் என்றாலும், அதனால் தான் அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரத்தை தவிர வேறு எந்த தேதியிலும், எந்தத் தொகையையும் கடனாக வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எதிரிக்கு நான் கடன் கொடுக்கவில்லை என்றாலும், அவர் எனக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலை சட்டப்படியான கடனுக்காக கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. வழக்கு காசோலைக்கான தொகை மற்றும் தேதியை நான் எதிரியின் விருப்பம் மற்றும் அனுமதி இல்லாமல் நிரப்பிக் கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த பணத்தையும் திருப்பிக் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

11. நான் எதிரியிடம் அவர் காசோலையை திருப்பி கேட்டால் ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் அதை பூர்த்தி செய்து, அவருடைய குடும்பத்தை நடுத்தெருவிற்கு இழுத்து விடுவதாக மிரட்டினேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Jan 6, 2026 5:09 PM

Judicial Magistrate 2, Sattur